பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**23 01 2026** **6 45**

வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மதுராந்தகத்தில் இன்று மாலை நடைபெற உள்ள பொதுக்கூட்டத்தில் பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி உரையாற்ற உள்ளார்.

2. நாட்டின் பொருளாதார சீர்திருத்தங்கள் சரியான பாதையில் சென்றுகொண்டிருப்பதாக தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

3. கடந்த ஆண்டில் இந்திய ஜவுளித்துறை **60** ஆயிரம் கோடி ரூபாய்க்கும் அதிகமான முதலீடுகளை ஈர்த்துள்ளதாக மத்திய ஜவுளித்துறை அமைச்சர் திரு. கிரிராஜ் சிங் கூறியுள்ளார்.

4. மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்தும் நோக்கில், **81** அரசு கல்லூரிகளின் ஆய்வக வசதிகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

5. இந்தோனேஷியா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதியில் இந்தியாவின் லக்ஷ்யா சென் இன்று தாய்லாந்தின் **Panitchaphon**-ஐ எதிர்கொள்கிறார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் விரைவில் அறிவிக்கப்பட உள்ள நிலையில் தேசிய ஜனநாயக கூட்டணி தனது பிரச்சாரத்தை இன்று தொடங்குகிறது.

இன்று மாலை 3 மணிக்கு செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகத்தில் நடைபெற உள்ள பொதுக்கூட்டத்தில் பிஜேபி மூத்த தலைவர் திரு. நரேந்திர மோடி உரையாற்ற உள்ளார்.

இதில் அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி, பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன், பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ், அமமுக பொதுச்செயலாளர் திரு. டி.டி.வி. தினகரன் உள்ளிட்ட கூட்டணி கட்சித் தலைவர்கள் பங்கேற்கிறார்கள்.

தமிழகத்தில் அஇஅதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியின் அதிகாரபூர்வ தேர்தல் பிரச்சாரத்தின் வலுவான தொடக்கமாக இன்றயை பொதுக்கூட்டம் இருக்கும் என்று தமிழக பிஜேபி தேர்தல் பொறுப்பாளர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

ஊழல் மலிந்த திமுக ஆட்சியை வீழ்த்தி தமிழகத்தின் அனைத்து தரப்பு மக்களுக்கும் நல்லாட்சி, வேலைவாய்ப்பு மற்றும் செழிப்பை வழங்குவதற்கான முதற்படி இது என்றும் சமூக வலைதளத்தில் அவர் பதிவிட்டுள்ளார்.

பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடியின் வருகையை முன்னிட்டு சென்னை - திருச்சி தேசிய நெடுஞ்சாலையின் இரு மார்கத்திலும் போக்குவரத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இன்று காலை 7 மணி முதல் மாலை 7 மணி வரை இந்த சாலையில் செல்லும் வாகனங்கள் மாற்றுப் பாதையில் திருப்பி விடப்படும் என்று காவல்துறை அறிவித்துள்ளது.

பிரதமரின் வருகையை முன்னிட்டு மதுராந்தகத்தில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

<<<<>>>>

நாட்டின் பொருளாதார சீர்திருத்தங்கள் சரியான பாதையில் சென்றுகொண்டிருப்பதாக தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் நடைபெற்று வரும் உலக பொருளாதார மன்றத்தின் வருடாந்திர கூட்டத்தில் உரையாற்றுகையில் இவ்வாறு அவர் கூறினார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் நேரடி பார்வையில் மேற்கொள்ளப்பட்டு வரும் தீவிரமான கட்டமைப்பு சீர்திருத்தங்களால் நாட்டின் வளர்ச்சி உறுதி செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்திய பொருளாதாரம் அதிக வளர்ச்சி மற்றும் உலகளாவிய நம்பிக்கையை பெற்ற இடமாக உருவெடுத்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

பல்வேறு துறைகளில் மேற்கொள்ளப்பட்ட முக்கிய சீர்திருத்தங்கள் முதலீட்டாளர்களின் நம்பிக்கையை அதிகரித்துள்ளன என்றும் அவர் கூறினார்.

இதன் காரணமாக உலகளாவிய நிறுவனங்கள் இந்தியாவில் தங்களது முதலீடுகளை விரிவுபடுத்தி வருவதாகவும், உலகில் வேகமாக வளர்ந்து வரும் பெரிய பொருளாதார நாடாக இந்தியா திகழ்வதாகவும் அவர் தெரிவித்தார்.

அடுத்த **5** ஆண்டுகளில் நாட்டின் வளர்ச்சி விகிதம் **6** முதல் **8** சதவீதமாக இருக்கும் என்று கணிக்கப்பட்டிருப்பதாகவும் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறினார்.

<<<<>>>>

கடந்த ஆண்டில் இந்திய ஜவுளித்துறை **60** ஆயிரம் கோடி ரூபாய்க்கும் அதிகமான முதலீடுகளை ஈர்த்துள்ளதாக மத்திய ஜவுளித்துறை அமைச்சர் திரு. கிரிராஜ் சிங் தெரிவித்துள்ளார்.

ஜவுளித்துறையில் அமல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு திட்டங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் தொடர்பாக நேற்று மும்பையில் அதிகாரிகளுடன் அவர் ஆலோசனை நடத்தினார்.

பின்னர் அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், **2026**ஆம் ஆண்டில் உற்பத்தியுடன் கூடிய ஊக்கத்தொகை திட்டம் இந்த வளர்ச்சி வேகத்தை மேலும் அதிகரிக்கும் என்றும், இது வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை நோக்கிய பயணத்தில் முக்கிய பங்கு வகிக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக அமைச்சர் செயற்கை மற்றும் பட்டு ஆராய்ச்சி சங்கமான **SASMIRA** மையத்திற்குச் சென்று அங்கு நடைபெறும் பணிகளை பார்வையிட்டார்.

ஜவுளி அமைச்சகத்தின் ஆதரவோடு நடைபெற்று வரும் பல்வேறு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்தும் திரு. கிரிராஜ் சிங் கேட்டறிந்தார்.

<<<<>>>>

தமிழ்நாட்டில் கறிக்கோழி வளர்ப்பு மற்றும் அதன் உற்பத்தி முறைகள் குறித்து விரிவாக ஆய்வு செய்வதற்காக, மாவட்ட அளவில் தொழில்நுட்பக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பாக மாநில அரசு விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கறிக்கோழி வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், உற்பத்தியில் உள்ள சவால்களைக் கண்டறியவும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்குழுவில் கால்நடை பராமரிப்புத் துறை அதிகாரிகள், வேளாண் வல்லுநர்கள் மற்றும் அரசு பிரதிநிதிகள் இடம் பெற்றுள்ளனர்.

இந்த குழுவானது, கறிக்கோழி பண்ணைகளில் நிலவும் சுகாதார நிலவரங்கள், தீவன மேலாண்மை மற்றும் வளர்ப்பு முறைகள் குறித்து நேரடி ஆய்வு மேற்கொள்ளும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பண்ணையாளர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள் குறித்து அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்கவும் இக்குழுவிற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

<<<<>>>>

மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்தும் நோக்கில், **81** அரசு கல்லூரிகளின் ஆய்வக வசதிகளை விரிவுபடுத்த நடப்பாண்டிற்கு **9** கோடியே **45** லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக உயர் கல்வித்துறை அமைச்சர் திரு. கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில், இணைய வழியாக விண்ணப்பித்தவர்களில் தகுதிவாய்ந்த **74** ஆசிரியர்கள் மற்றும் **55** ஆசிரியரல்லாப் பணியாளர்களுக்கு இடமாறுதலுக்கான ஆணைகளை வழங்கிப் பேசுகையில் இதனை அவர் தெரிவித்தார்.

அரசு பாலிடெக்னிக் மற்றும் பொறியியல் கல்லூரி முதல்வர்கள் மற்றும் பணியாளர்களுக்கு அண்ணா மேலாண்மை மையம் மற்றும் மாநில உயர்கல்வி மன்றம் வாயிலாக நவீன நிர்வாகப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

தமிழக அரசு உயர்கல்வித் துறையில் 'நான் முதல்வன்', 'புதுமைப்பெண்', 'தமிழ்ப் புதல்வன்' போன்ற முன்னோடித் திட்டங்கள்

செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் இதனால் உயர்கல்வியில் மாணவர் சேர்க்கை அதிகரித்துள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

<<<<>>>>

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலனில் திமுக அரசுக்கு அக்கறையில்லை என்று பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள சமூக வலைதளப் பதிவில், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின்கீழ் தேனி, திருநெல்வேலி, தென்காசி மாவட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட 4 கோடியே 62 லட்சம் ரூபாயில் ஒரு ரூபாய் கூட செலவழிக்கப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டிருப்பது அதிர்ச்சியளிப்பதாக கூறியுள்ளார்.

முந்தைய ஆட்சியைக் காட்டிலும் தாட்கோவின் கீழ் தென் மாவட்டங்களுக்கு 36 கோடி ரூபாய் குறைவாக ஒதுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

விளம்பரங்களுக்கு பல கோடி ரூபாயை ஒதுக்கும் மாநில அரசு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வீட்டு வசதிக்காக போதிய

பணத்தை ஒதுக்காதது கண்டிக்கத்தக்கது என்றும் திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

<<<<>>>>

<u>*இருவரிச் செய்திகள்*</u>

மத்திய தரைக்கடல் பகுதியில் ரஷ்யாவுடன் தொடர்புடைய எண்ணெய்க் கப்பல் ஒன்றை ஃபிரான்ஸ் கடற்படையினர் தடுத்து நிறுத்தி சோதனை மேற்கொண்டனர்.

-------------

தேர்தல் மேலாண்மை குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இந்தியாவும் - நமீபியாவும் கையெழுத்திட்டுள்ளன.

-------------

தேனி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டு மையத்தின் சார்பில் இன்று வீரபாண்டி அரசு கலை அறிவியல் கல்லூரியில் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் நடைபெற உள்ளது.

-------------

சென்னையில் நாளை பொதுவினியோகத் திட்ட குறைதீர் முகாம் 19 மண்டல அலுவலகங்களில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

-------------

திருச்சி தலைமை அஞ்சல் அலுவலகத்தில் சாலைப் பாதுகாப்பை வலியுறுத்தும் விழிப்புணர்வு நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது.

-------------

தேசிய பெண் குழந்தைகள் தினத்தை முன்னிட்டு கள்ளக்குறிச்சியில் விழிப்புணர்வு சுவரொட்டியை மாவட்ட ஆட்சியர் திரு. எம்.எஸ். பிரசாந்த் நேற்று வெளியிட்டார்.

-------------

காஞ்சிபுரத்தில் பள்ளிக் கல்வித்துறை சார்பில் மாநில அளவிலான பாரதியார் மற்றும் குடியரசு தின விளையாட்டுப் போட்டிகளை மாவட்ட ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் தொடங்கி வைத்தார்.

-------------

வட சென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் சென்னை வால்டாக்ஸ் சாலையில் கட்டப்பட்டு வரும் அடுக்குமாடிக் குடியிருப்புகளை அமைச்சர் திரு. சேகர் பாபு நேற்று நேரில் ஆய்வு செய்தார்.

-------------

சென்னையில் உள்ள தொல்காப்பியப் பூங்காவில் நடைபயிற்சி மேற்கொள்வோருக்கு வழங்கப்படும் அனுமதிச் சீட்டு எண்ணிக்கை அடுத்த மாதம் ஒன்றாம் தேதியில் இருந்து **500**-ல் இருந்து மூவாயிரமாக உயர்த்தப்படுவதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

-------------

சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு சென்னையில் உள்ள **16** சட்டமன்றத் தொகுதிகளில் மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் மற்றும் வாக்கினை சரிபார்க்கும் கருவியை பயன்படுத்தும் செயல்முறை விளக்க மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

-------------

*விளையாட்டுச் செய்திகள்*

இந்தோனேஷியா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதியில் இந்தியாவின் லக்ஷயா சென் இன்று தாய்லாந்தின் **Panitchaphon**-ஐ எதிர்கொள்கிறார்.

**மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதியில் இந்தியாவின் பி.வி. சிந்து, சீனாவின் Chen Yu Fei-ஐ எதிர்கொள்கிறார்.**

**<<<<The End>>>>**